★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர்: 20 புரட்டாதி 3 ஷவ்வா: 15 இதழ்: 220
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 19-9-78

'காசி' உட்பட 11 இளைஞர்கள்

## விடுதலை செய்யப்பட்டு

### மீண்டும் அக். 22 வரை றிமாண்ட்

(மட்டக்களப்பு)

சட்டவிரோதமான துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தது, கைக்குண்டு வீசியது ஆகிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட காசிஆனந்தன், மாவை சேனாதிராஜா உட்பட பதினொரு தமிழ் இளைஞர்களும் நேற்றுக்காலை பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்ட சில நிமிட நேரத்தில் மீண்டும் புதிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அக்டோபர் மாதம் 22ம் திகதி வரை இவர்கள் அனைவரையும் றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்

மட்டக்களப்பு மாவட்டநீதிபதி திரு, சி மனோகரா நேற்றுக்காலை பதினொரு தமிழ்

(6ம் பக்கம் பார்க்க)

## உப-தபால்நிலையக் கொள்ளை:

# 'ஹெலிகொப்டர்' மூலம் நடந்த தேடுதல்வேட்டை

## வேடிக்கை பார்த்தவர்கள் 'முற்றுகை'யிடப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

**பட்டப்பகலில் ஒரு உபதபால் நிலையத்தை கொள்ளையடித்த இளைஞர்களை, 'ஹெலிகொப்டர்' மூலம் தேடுதல் வேட்டை நடத்தி, வீதியில் சென்றவர்கள், பொலிஸாரினாலும் இராணுவத்தினராலும் 'ட்ரக்'குகளில் கூட்டிச் செல்லப்பட்ட சம்பவம் நேற்று மாலை திருநெல்வேலியில் நிகழ்ந்தது.**

**கொள்ளையில் சம்பந்தப்பட்டவர்களை 'ஹெலிகொப்டர்' மூலம் நகரின் பிரதான சந்தியில் தேடுதல் நடத்தியது இலங்கையில் இதுவே முதற்தடவை என்று கூறப்பட்டது.**

திருநெல்வேலி உபதபால் நிலையக் கொள்ளை தொடர்பாக நேற்றுமாலை திருநெல்வேலிப்பகுதியில் 'ஹெலிக்கோப்டர் மிகத் தாழ்வாகப் பறந்து கொண்டிருந்த அதேசமயம் பொலிஸாரும். இராணுவத்தினரும் மக்களைக் கைதுசெய்வதில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். பஸ்நிலையத்திலும் வீதியிலும் நின்று ஹெலிக்கோப்டரைப் பார்த்துக்கொண்டு நின்றவர்களை திடீரென்று முற்றுகையிட்ட பொலிசாரினாலும் இராணுவத்தினராலும் டரக்குகளிலும். ஜீப்புகளிலும அழைத்துச்செல்லப்பட்டனர். முக்கிய சந்திகளில் பொலிசாரும் இராணுவத்தினரும் நின்று வாகனங்களைச்சோதனையிட்டனர். சில வீடுகளும் சோதனைக்குட்படுத்தப்பட்டது. பஸ்களும் சோதனையிடப்பட்டன.

# இளம் பெண்ணை பணயம் வைத்து ரூ 10,000 கொள்ளை

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி உப-தபால் நிலையத்தில் 5 இளைஞர்களை கொண்ட கோஷ்டியொன்று துப்பாக்கி முனையில், உதவியாளரான இளம் பெண்ணைபணயம் வைத்து, இரும்புப் பெட்டியிலிருந்த சுமார் 10,000 ரூபாவை நேற்று நண்பகல் கொள்ளையடித்து சென்றுள்ளது.

நேற்று 'பென்சன்' தினமாதலால், பென்சன் வழங்குவதற்காக உப தபால் நிலையத்தில் கூடியளவு பணம் வைக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது.

உபதபால் நிலைய அதிபர் திருமதி கமலாசனிதேவி சற்குணனந்தன், அவரது உதவியாளர் செல்வி பிரபா வைத்திலிங்கம் நிலையத்திற்குள் இருக்கும்போதே இச்சம்பவம் நடந்தது உபதபால் நிலையத்துடன் இணைந்துள்ள வீட்டில், இருந்தவர்கள் அந்நேரம் நித்திரை செய்து கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது

நண்பகல் நேரம், கந்தோர் பூட்டப்பட்டிருந்த போது இளைஞர்கள் விருந்தையில் காணப்பட்டதாகவும், பின் நண்பகல் 1 மணிக்கு கந்தோர் திறக்கப்பட்டபோது அவர்கள் 'தொலைபேசி கொத்தை' கேட்டதாகவும் இச்சம்பவம் பற்றி கூறப்படுகிறது.

உதவியாளர் அவர்களை கவுண்டருக்கு வரும்படி கூறிவிட்டு, பூட்டப்பட்டிருந்த கதவை திறந்து தொலைபேசி கொத்தை கொடுத்த சமயம் திடீரென ஒரு இளைஞர் துப்பாக்கியுடன் உள்ளே செல்ல மற்றும் இருவரும் உள்ளே சென்றதாகவும் கூறப்படுகிறது.

உதவியாளரான இளம் பெண்ணை துப்பாக்கி முனையில் பணயம் வைத்து பணத்தை தருமாறு கேட்டபின் இரும்புபெட்டியிலும், லாச்சியிலும் இருந்த பணத்தையும் மற்றப்பததிரங்களையும், எடுத்தார்கள் எனறும் கூறப்படுகிறது. அச்சமயம வெளியில் இருவாலிபர்கள் நின்று கண்காணித்துக் கொண்டிருந்தார்களென்றும் கூறப்படுகிறது.

வெளியில் சயிக்கில்கள் நின்றதாகவும், கார் வந்து போன சத்தம் எதுவும கேட்கவில்லையென்றும் கூறப்படுகிறது.

பொலிஸாரும், இராணுவத்தினரும் உடனடியாக வந்து அப்பகுதியை முற்றுகையிட்டனர்.

உதவி பொலிஸ் அதிபர் திரு. ஆனந்தராசா, மற்றும் இராணுவ உயர் அதிகாரியும் சம்பவம் நடந்த இடத்திற்கு நேரில் வந்து விசாரணை நடததினார்கள்.

தபால் பகுதி அத்தியட்சகர் மற்றும் தபால் கந்தோர் உத்தியோகத்தர்களும், சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று இருப்பு எடுத்தனர்.

வாகனங்கள் யாவும் பலத்த சோதனையிடப்பட்டது. சந்திகளில் பொலிஸாரும் இராணுவத்தினரும் நின்று சோதனையிட்டனர். வீடுகளும் சோதனையிடப்பட்டது.

[க]

காங்கேசன்துறையில்

## கடத்தல் பொருட்கள் கைப்பற்றப்பட்டன

[மாவிட்டபுரம்]

நாற்பதினாயிரம் ரூபா பெறுமதியான கடத்தல் பொருள்களை, காங்கேசன்துறையிலுள்ள வீட்டிலிருந்தும். கரையோரமாக நின்ற வள்ளமொன்றிலுமிருந்தும் காங்கேசன்துறை பொலிஸார் சனிக்கிழமை கைப்பற்றியுள்ளனர்

19 ருத்தல் அபின், கைக்கடிகாரங்கள், 'கல்கியூலேட்டர்'கள், பேனைக்கள் ஆகியன கைப்பற்றப்பட்ட பொருள்களாகும்,

இதுசமபந்தமாக சந்தேகத்தின்மீது நால்வர் கைதுசெய்யப்பட்ட பொழுது, மூவர் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். இவர்கள் மூவருககும் மொத்தம 38,695 ரூபா அபராதம் விதிக்கப்பட்டு கடத்தல் பொருள்க்ள் பறிமுதல் செய்யப்பட்டன.

குற்றத்தை ஒப்புக்கொள்ள மறுத்த காங்கேசன்துறையைச் சேர்ந்த வி. மகாதேவன் மல்லாகம் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது, இவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

அச்சுவேலியில்

## கோஷ்டிச் சண்டையில் மூவர் காயமடைந்தனர்

(மாவிட்டபுரம்)

அச்சுவேலியில் இடம்பெற்ற ஒரு கோஷ்டிச் சண்டையில் படுகாயமடைந்த மூவர், நேற்று யாழ்ப்பாணம ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

அச்சுவேலி வடக்கு, தெற்கைச் சேர்ந்த இரண்டு கோஷ்டிகளுக்கிடையே காணி தகராறு காரணமாக சண்டை மூண்டதில் உருத்திரமோகன், தேவராசா ஆகிய இருவரும் வாள்வெட்டு காயங்களுக்கும பாஸ்கரன் என்பவர் துப்பாக்கிச்சூட்டு காயங்களுக்கும் இலக்கானார்கள். இது சமபந்தமாக அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த நால்வரை காங்கேசன்துறை பொலிஸார் தேடுகின்றனர்.

## கூட்டுத் தொழிற்சங்க குழுவின் கோரிக்கைகள்

(கொழும்பு)

இம்மாதய 28ம் திகதி நடைபெறவிருக்கும் உத்தேச ஒருநாள் அடையாள பொது வேலைநிறுத்தத்தில் அரசாங்க லிகிதர் சேவைச்சங்கம், ஸ்தல ஸ்தாபன தொழிற்சங்க சம்மேளனம், இலங்கை வங்கி ஊழியர்சங்கம, இலங்கை தொழிலாளர் சம்மேளனம், லங்கா தொழிற்சங்கங்களின் சம்மேளனம், இலங்கை ஆசிரியர் சங்கம், ஸ்ரீலங்கா தொழிலாளர்களின் சம்மேளனம், அகிலஇலங்கை அரசாங்க லிகிதர்சங்கம், அரசாங்க தொழிற்சங்க சம்மேளனம், பொதுச்சேவை தொழிற்சங்க சம்மேளனம், ஸ்ரீ லங்கா ஜாதிக குருசங்கம், ஸ்ரீலங்கா அரசாங்க தொழிற்சங்க சம்மேளனம், ஸ்ரீலங்கா சுதந்திர தொழிற்சங்க சம்மேளனம், இலங்கை வர்த்தகஊழியர் சங்கம், இலங்கை தொழிற்சங்க சம்மேளனம், இலங்கை தொழிற்சங்க மத்தியசபை, தொழில்நுட்பசேவைதொழிற்சங்க சம்மேளனம் ஆகியவை கலந்துகொள்ளும் என்று கூட்டுத்தொழிற்சங்க நடவடிக்கைக்குழு விடுத்துள்ள கூட்டறிககையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க லிகிதர்சேவைச் சங்க பொதுச்செயலாளர் திரு. குணசேன மகாநாம விடுத்துள்ள சுற்றறிக்கையில்;

''1977 நவம்பர் வரவு செலவு திட்டத்தைத் தொடர்ந்து பங்கீட்டுப் புத்தகங்கள் வாபஸ்பெறப்பட்டபோது இருந்த அடிப்படையிலும் விலையிலும் அரிசி, சீனி, மற்றும் உணவுப்பொருட்களின்

(6-ம் பக்கம் பார்க்க)

## வானொலியில்

(கொழும்பு)

சைவப்பெரியார் சிவபாதசுந்தரனாரது நூற்றாண்டு விழாவையொட்டி, கடந்த வாரம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெற்ற விழா நிகழ்ச்சிகளின்தொகுப்பு இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின தமிழ்சேவை ஒன்றில் இன்று இரவு 9-45 மணிக்கு அஞ்சலாகும். (கெ)

## வரி விளம்பரம்

### தேவை

யாழ். தேயிலை மொத்த விற்பனை நிலையமொன்றில் கிழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நிர்வாக உதவியாளர் (பெண்) காசாளர் (பெண்) பண்டகசாலை பொறுப்பாளர் (ஆண்) விற்பனையாளர் (பெண்) டிலிவரி பையன்கள் (சொந்த சைக்கில் உடையோர் மட்டும்) ஆடர் சேகரிப்பவர்கள் [இருபாலாரும்] கடிதமூலம் தொடர்பு கொள்க. விளம்பர இல. 0355 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம்.

0355

யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உள்ள இரு பெரிய வர்த்தக நிலையங்களின் உரிமையாளருக்கு அந்தரங்க காரியதரிசி தேவை. சுறுசுறுப்பும் செயல் திறனும உள்ளவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் கடிதமூலம் தொடர்கொள்க. விளம்பர இல. 0356 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.

0356

சூடம் செய்வதில் அனுபவமுள்ளவர்களும் சூடம் செய்வதற்கான உபகரணங்களும் தேவை. கடிதமூலப் தொடர்பு சொள்க. விளம்பர இல 0357 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம

0357

கொடிகாமம் மருதடி விநாயகர் ஆலய கட்டிட நிதிக்காக 16-09-78ல் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட அதிர்ஷ்ட இலக்கமுடிபுகள்.

1-வது — 3669
2-வது — 912
3-வது — 1822

ஆறுதல் பரிசுகள்

| | |
|---|---|
| 1147 | 3505 |
| 3992 | 766 |
| 1(88 | 4098 |
| .686 | 1982 |
| 901 | 3692 |

மருதடி விநாயகர் திருப்பணிச் சபை, கச்சாய் வீதி, கொடிகாமம். 0352

### கனரகப் பொருட்களுக்கான கேள்வி விண்ணப்பம்

கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கத்தில் கீழ்க்காணும் பொருட்களை விற்பதற்கான கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கொள்வனவுசெய்ய விரும்புபவர்கள் பொருட்களைப் பார்வையிட்டு, தங்கள் விண்ணப்பங்களை 23-09-78 திகதி நண்பகல் 12 மணிக்குப் பிந்தாமல் கீழ்க்காணும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல்வேண்டும்.

பொருள் விபரம்:

அலுமினியம் பிளேன் தகரம், 8 3, இரும்பு ஸ்குறுாஸ், நீர்அரத்தாள், ஸ்பனர்ஸ், புட்வால்வ் கவர், பித்தளை ஸ்குறுாஸ், மின்சார பிளக்ஸ், சுவிற்ஸ், சீலிங்றோஸ், டிஸ்ரெம்பர் பெயின்ற், சைலெஞ்சர் பம்ஸ், பிளாஸ்ரிக் பைப்ஸ், வச்சிரம், நீர்இறைக்கும் யந்திரவண்டி பெரிது, மின்தெளி கருவி, ராப் ஆகியன.

முகவரி:

பொதுமுகாமையாளர், கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன்.
0353

### வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# "விஜயவீர முன்னர் வகுப்புவாதியாக இருந்தவர்"

[யாழ்ப்பாணம்]

"தேசிய ஐக்கியம் பற்றி பேசுகின்ற மக்கள் ஐக்கிய விடுதலைமுன்னணிதலைவர் றோகண விஜயவீர 71ம் ஆண்டு நடந்த அசம்பாவிதங்களின் முன்பு, வகுப்புவாதியாக விளங்கினர்"

ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் நடந்த கருத்தரங்கில் பேசிய தேசிய ஒருமைப்பாடு இயக்கத்தைச் சேர்ந்த திரு. நிகால்டயஸ் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. கே. சுப்பையா தலைமையில், மேலாதிக்கவல்லரசுகளின் யுத்தக்கெடுபிடிகளை எதிர்த்தும், சமூக ஏகாதிபத்தியத்தின் பயங்கரத்தன்மையை அம்பலப்படுத்தியும், 3 உலக கோட்பாட்டை ஆதரித்தும் நடந்த இக்கருத்தரங்கில், திரு. நிகால் மேலும் பேசுகையில்;

"தென்இலங்கையின்வகுப்புவாதத்துக்கும், வடஇலங்கையின் வகுப்புவாதத்துக்கும் எதிராக தாம் நாடெங்கும் கூட்டங்கள் வைத்துவருவதாகக் கூறினர்.

இலங்கை சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. கே. செந்திவேல் கூறியதாவது: "ஏகாதிபத்தியங்களின் நெருக்கடிகளினுல் 3ம் உலக யுத்தம் வந்தேதிருமென்று மாசேதுங் சொல்லியிருக்கிருர். சோவியத் சமூக ஏகாதிபத்தியம் அமெரிக்க ஏகாதிபத்தியத்திலும் கூடுதலாக யுத்த அபாயத்தை வளர்த்துள்ளது. இதனுல் வரும் சர்வதேச யுத்தத்திலிருந்து எமதுநாட்டை நாம் பாதுகாப்போம்"

'மார்க்ஸிச லெனினிசமே தெரியாதவர்களுக்கு மாசேதுங் முன்வைத்த மூன்று உலகக் கோட்பாடு விளங்காது. இதை மாசேதுங் சொன்னரா? இல்லையா? என்றுகூட சிலர் கேட்கின்றுர்கள். மாசேதுங் சொல்லவில்லை என்றும் சொல்லுகின்றனர். மாசேதுங் சொன்னரா? இல்லையா? என்பதல்ல இன்றுள்ளபிரச்னை இன்றுள்ள நிலையில் இது சரியா? இல்லையா என்பது தான் முக்கியம். பிரதான முரண்பாடுகளை எவ்விதம் கையாளுவது என்று மாசேதுங் குறிப்பிட்டுள்ளார். இதனை அறிந்துகொள்ளாததால்தான் சிலு பிழையாக மாற்விட்டதென்று சிலர் சொல்கின்றுர்கள்.

மூன்று உலகக் கோட்பாடு சர்வதேச ஐக்கிய முன்னணிக் கோட்பாடாகும்.

தேசிய ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த திரு. ஜி ஐ டி தர்மசேகரா இலங்கை வாலிபர் சங்க சமமேளனத்தைச் சேர்ந்த திரு. வை. வன்னியசிங்கம, கீழைக்காற்று இயக்கத்தைச் சேர்ந்த திரு. காமினியாப்பா, தேசிய ஒருமைப்பாட்டு இயக்கத்தைச் சேர்ந்த திரு. ஏ. எஸ். எம காசிம ஆகியோரும உரை நிகழ்த்தினர் [கூ-க]

## நல்லூர்த்தொகுதி வேலை வங்கி நேர்முகப் பரீட்சை

(திருநெல்வேலி

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நல்லூர்த் தொகுதிக்கான வேலை வங்கித் திட்ட நேர்முகப் பரீட்சை நேற்று நடைபெற்றத.

திட்ட அமுலாக்கல் அமைச்சு அதிகாரிகள், உணவு இலாகா அதிகாரிகள் முதலானேர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஒகஸ்ரின் தலைமையில் நேர்முகப்பரீட்சையை முன்னின்று நடத்தினர். நேற்று இப்பரீட்சைகு சுமார் 00 பேர் வரை சமுகமளித்திருந்தனர் (உ)

## தனயனைக் கொன்ருராம் தந்தை!

(வவனியா)

பெற்ற மகனைச் சுட்டுக் கொன்ருராம் தந்தை. இச்சம்பவம் வவனியா நொச்சிக்குளத்தில் நடைபெற்றுள்ளது.

இரு மாதங்களுக்கு முன் திருமணம் செய்து கொண்ட விநாசித்தம்பி செல்வராஜா என்ற இளைஞரே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார். இது பற்றிக் கூறப்படுவதாவது: இறந்தவரின் தந்தையான விநாசித்தம்பி, மகனின் காணிக்குள் கடையொன்றைக் கட்டியிருந்தார். அடுத்த மாதம் கிராமசேவையாளர் பதவியிலிருந்து ஓய்வுபெறவிருந்த விநாசித்தம்பி இது சம்பந்தமாக மகனின் வளவுக்குள் அடிக்கடி போய் வந்தாராம். மதுபோதையில் வளவுக்குள் வரவேண்டாமென மகன் கண்டித்ததைத் தொடர்ந்து இருவருக்குமிடையில் மனக்கசப்பு ஏற்பட்டதாம். தமது துப்பாக்கியுடன் கடையினுள் இருந்த விநாசித்தம்பிமகனைவருமாறு அவலக்குரல்கொடுத்தாராம். தந்தைக்குஏதோ வருத்தம் என எண்ணிகடையினுள் பிரவேசித்த மகனை தந்தை சுட்டுக்கொன்ருராம். தகவல் அறிந்தபொலிசார் ஸ்தலத்துக்குச் சென்று நடவடிக்கையில்ஈடுபட்டனர். (உ)

## கிராம வளர்ச்சியில் மக்கள் பங்கு

(காரைநகர்)

"எட்டுக்கட்டிக்கிராமத்தின் முக்கிய பெரும் பிரச்னையாக இருந்துவரும் குடிநீர்க் கஷ்டத்தை போக்குமுகமாக இக்கிராமத்தவர்களுக்கு குடிநீர்க்கிணறு அமைக்கும் பொருட்டு வடடுக்கோட்டை எம் பி திரு .தா திருநாவுக்கரசு இவ்வருடத்திற்கான பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கிழ் 10,000 ரூபா நிதி ஒதுக்கியுள்ளார் இந்த நிதியைப் பெற்று இக்கிராமத்தின் அத்தியாவசிய தேவையாகவிருக்கும் குடிநீர்க் கஷ்டத்தைப் போக்க இட்டகுதி பக்களும் கிராம அபிவிருத்திச் சங்கமும் தீவிரமாக ஈடுபட வேண்டும்.

இவ்வாறு ஊர்காவற்றுறை பிரிவு அரசாங்க அதிபர் திரு எஸ் சடாட்சர சண்முகதாஸ் காரைநகர் எட்டுக்கட்டி கிராம அபிவிருத்திச் சங்கப் பணியிலையில் நடைபெற்ற கிராம அபிவிருத்திச்சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: எமது பாராளுமன்ற உறுப்பினர் திரு தா திருநாவுக்கரசு இக்கிராமத்தின் வளர்ச்சியில் மிகவும் அக்கறை கொண்டுள்ளார் அவர் பாகுபாடுகாட்டாத பரந்துபட்ட மனம் உடையவர் மிகவும் நல்லவர்

இக்கிராமத்து சிறுர்களின் கல்வியினை மேம்படுத்துமுகமாக, நாம் இங்கு ஒரு பாலர் பாடசாலையை நிறுவ நடவடிக்கை எடுத்துள்ளோம்

சங்கத்தலைவர் திரு க பாலசிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினர் இக் கூட்டத்தில் தொல்புரம் செல்வா பொதுப் பணிமன்ற செயலாளர் சி தர்மலிங்கம், முன்னுள் காரைநகர் தெற்கு கிராமசபை துணைத்தலைவர் திரு க வீரகத்திப்பிள்ளை சங்கபொருளாளர் செ இராஜேந்திரம் இத்தாலிய ஒப்பந்த ஸ்தாபனப் பிரதிநிதி திரு அ ஜெயரத்தினம், ஊரி கி அ ச தலைவர் திரு எஸ் தம்பிராசா, காரைநகர் கிழக்கு கிராம சேவை அதிகாரி திரு க சிறீஸ்கந்தராசா, மலாயா ஹோமியோபதி வைத்தியர் அ நவரத்தினம் உட்பட பலர் கூட்டத்தில் உரையாற்றினர்

இக்கூட்டத்தில் பின்வருவோர் உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: க பாலசிங்கம், உப தலைவர்; நா வடிவேலு செயலாளர்: எஸ் கே சிவலிங்கம், உப செயலாளர்: க ஆதித்தன், தனதிகாரி; செ இராஜேந்திரம், கணக்குப் பரிசோதகர்; மா கணேசமூர்த்தி (இ)

## யாத்திரிகர் விடுதியில் களவு

(வவனியா)

வவனியா யாத்திரிகர் விடுதியிலிருந்து 3000 ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன. இதுதொடர்பாக விடுதிப் பொறுப்பாளர் ஏ. எஸ். பெரேரா வவனியாப் பொலிசில் புகார் செய்துள்ளார். (உ)

## தொடர்ந்து றிமாண்ட்

(பண்டத்தரிப்பு)

கொக்குவிலில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுக் கொலைச் சம்பவம் தொடர்பாக சந்சந்தேகத்தின் பேரில் கைது செய்யடபட்டு ற்மாண்டில் வைக்கப்பட்டிருந்த பண்டத்தரிப்பைச் சேர்ந்த கார்ச்சாரதி எஸ். பத்திநாதன் என்பவரை யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது இமமாதம 26-ந் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (உ)

## மீனவர் கடலில் மாயம்; மாதகல் பகுதி சோகமயம்

(பண்டத்தரிப்பு)

இரவு வேளையில் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்ற மூன்றுபிள்ளைகளின் தந்தை ஒருவர் கடலுக்குப் பலியான சம்பவம் மாதகல் கடலில் நடைபெற்றுள்ளது.

மாதகல் கிராமத்தைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் துரைசிங்கம் என்னும் 40 வயதுடைய பிரஸ்தாபநபர் அதே இடத்தைச் சேர்ந்தஅந்தோனிமுத்து என்னும் 60 வயதான ஒருவருடன் கடந்தசெவ்வாய்க்கிழமை இரவு இயந்திரம் பூட்டடபட்ட கட்டுமரமொன்றில் மீன்பிடிக்கச் சென்ருராம்.

கடற்கரையிலிருந்துஇரண்டு மைல் தூரம் சென்றபோது இயந்திரம் கட்டப்பட்டிருந்த் கயிறு ஒன்று தற்செயலாக அறுந்துபோகவே அதைப் பிடித்துக் கொண்டிருந்த காலஞ்சென்றவர் கடலுக்குள் தவறி விழுந்து விட்டதாகவும் இச்சமபவம் பற்றிக்கூறப்படுகிறது. உடனே கட்டுமரத்தில் மறுகோடியில் இருந்த அந்தோனிமுத்து காலஞ்சென்ற நபரை எங்குங்காணுது "சூள" எனப்படும் வெளிச்சத்தைக் கொளுத்திப்பார்த்ததாகவும இவ்வெளிச்சத்தைக் கண்ணுற்ற அயல்ல் சென்ற மீன்பிடிப்படகுகள் அருகே வந்து விபரமறிந்துதேடுதல் வேட்டையில் ஈடுபட்டதாகவும் எவருப்சடலத்தை கண்டுபிடிக்க முடியாது திருமபிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மறுநாட்காலையில் இச்சம்பவம் தொடர்பாக சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிசாரும் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர். இதைவிட மயிலிட்டி, காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை, தாளையடி ஆகியஇடங்களைச் சேர்ந்த யந்திர வள்ளங்களில் பலசுழியோடிகளும சேர்ந்து தேடுதல் வேட்டை நடத்தியும் பலன் கிடைக்கவில்லை. (உ)

## "கூட்டணிக்கிளைகள் தீண்டாமை ஒழிப்பில் தீவிரம் காட்டவேண்டும்"

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டைத் தொகுதியில் இதுவரை சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு திறந்து விடாது இருக்கும் ஆலயங்களிலும் மற்றும் பொதுநிலையங்களிலும் எதிர்வரும் அகடோபர் மாதம் 2-ம திகதிக்கு முன்பாக ஆலய பிரவேசம் நடாத்தவும் பொது இடங்களில் சமத்துவ நிலையை நிலைநாட்டவும் அந்தந்தப் பகுதிகளிலுள்ள தமிழர்விடுதலைக்கூட்டணிக் கிளைகள் தீவிரநடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்என்று கோருந்தீர்மானமொன்று வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சித்தன்கேணியிலுள்ள கூட்டணி மத்திய அலுவலகத்தில் மத்திய குழுவின் உபதலைவர் சட்டத்தரணி மூ கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள 15 கூட்டணிக்கிளைகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இத்தீர்மானத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;- சமூக குறைபாடுகள் ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு ஆகியனவற்றையிட்டு ஆவரங்காலில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற் கிணங்க வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள கிராமங்களில் ஆலயங்கள், பொதுநிலையங்கள் ஆகியவற்றில் சமத்துவத்தை நிலைநாட்டுவதில் அவ்வப்பகுதிகளிலுள்ள கூட்டணிக் கிளைகள் தீவிரநடவடிக்கையில் இறங்கவேண்டும். முதலில் சமாதானவழிகளில் ஒற்றுமையாக சமத்துவத்தை நிலைநாட்ட முயற்சிக்க வேண்டும பிரச்னைகள் ஏற்படும பட்சத்தில் சட்டநடவடிக்கைகளை அவ்வப்பகுதியிலுள்ள சிறுபான்மைத் தமிழ் மக்களின் அனுசரணையுடன் மேற்கொள்ளபபடவேண்டும். எதிர்வரும் அக்டோபர் மாதம் இரண்டாம் திகதிக்கு முன்பாக இது தொடர்பான சகல நடவடிக்கைகளும நிறைவேற்றப்பட வேண்டும.

ஈழநாடு
The Eelanaadu

## டவர் மண்டபம்

சிங்கள நாடகக்கலையின் வ்ளர்ச்சிக்கும் இலங்கையின் விடுதலைப் போராட்டத்துக்கும் களமாக விளங்கும் பிரசித்திபெற்ற டவர் மண்டபம் புனரமைக்கப் பெற்று மீண்டும் நாடகக் கலைக்கு அர்ப்பணிக்கப்பெற்றிருக்கிறது.

புதுப்பொலிவுடன் விளங்கும் டவர் மண்டபத்தைச் சென்ற வெள்ளிக்கிழமை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவும் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்து அங்கு நடந்த ''ஸ்ரீ சங்கபோ'' என்ற நாடகத்தையும் பார்த்து மகிழ்ந்தனர்.

சிங்கள நாடகக்கலை வளர்ச்சியடைவதற்குக் காரணமாக விளங்கிய டவர் மண்டபம் சில வருடங்களாக ஆங்கிலத்திரைப் படங்கள் திரையிடப்படும் சினிமாத் தியேட்டராக விளங்கியது.

டவர் மண்டபம் மீண்டும் நாடகக் கலையின் வளர்ச்சிக்குப் பணி புரிய வேண்டுமென்ற கோரிக்கை கடந்த பல வருடங்களுக்குமுன்னர் மக்கள்மத்தியில் எழுந்தது.

ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கம் ஆட்சிபீடத்துக்கு வந்ததும் இந்தக்கோரிக்கை பிரதமர் திரு.பிரேமதாசாவின் கவனத்துக்கு வந்தது. கலைப்பிரியரானதிரு. பிரேமதாசா டவர் மண்டபத்தை எடுப்பதில் உறுதியுடன் செயல்பட்டார். இன்று டவர் மண்டபம் கையேற்கப்பட்டு கொழும்புமாநகர சபையின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. சிறந்த முறையில் அந்த மண்டபம் புனரமைக்கப்பட்டு ஒரு கலைக்கூடமாக விளங்குகிறது. பிரதமரின் தலைமையில் டவர் மண்டப தர்மகர்த்தாசபையொன்று விரைவில் நிறுவப்படவிருக்கிறது.

சிங்கள நாடகக்கலையின் வளர்ச்சிக்காக எடுக்கப்படும் இந்த நடவடிக்கைகளைப் பாராட்டி வரவேற்க வேண்டும்.

தமிழ்நாடகக்கலை யாழ்ப்பாணத்தில் ஒரு காலத்தில் உச்சநிலையிலிருந்தது. இன்றும் பழையகால நினைவுகளை எடுத்துக் கூறக்கூடிய சில கலைஞர்கள் உள்ளனர்.

கூத்துக் கொட்டகை, புத்துவாட்டிச் சோமுவின் இல்லம் என்பன தமிழ்நாடகக்கலையின் பெருமைக்குரிய இடங்களாகக் கருதப்படுபவை.

ஆனால் இன்று அந்தக் கூத்துக் கொட்டகையையோ புத்துவாட்டிச் சோமுவின் இல்லத்தையோ காணமுடியாத பரிதாப நிலை.

இதேபோன்றுதான் தமிழ் நாடகக் கலையும் வளர்ச்சி குன்றியிருக்கிறது. நாடக சபாக்கள்கூட இல்லையென்றே சொல்லவேண்டும். சிங்கள நாடகக் கலை வளர்ச்சியடைந்துள்ள அளவுக்குதமிழ் நாடகக்கலை வளரவில்லை. இந்தநிலை நல்லதல்ல.

வெறும் சினிமா ரசனை ஒரு சமுதாயத்தின் நாகரிகத்துக்கும் பண்பாட்டுக்கும் கேடுதான் விளைவிக்கும்.

யாழ்ப்பாணத்தில் பழைய மண்டபங்கள் இல்லையானாலும் நல்ல நாடகங்களை மேடையேற்றக் கூடிய புதிய, நவீன மண்டபம் ஒன்றையாவது பழைய பெயரில்நிறுவிதமிழ்நாடகக் கலையின் வளர்ச்சிக்குவழி காணவேண்டியது அவசியம்.

## இன்றைய இராசிப்பலன்

புரட்டாதி மாதம் 3-ந் திகதி
செவ்வாய்க்கிழமை
(19-9-78)

**மேடம்:-** அதிகாரப்பேறுக்கும் அதிகப் பொருள் வரவிற்குமிடமுண்டு. ஆக்கப்பணிகளில் ஈடுபடுவீர்கள், குடும்பத்திலும் மகிழ்ச்சி நிலவும், நல்லநாள்.

**இடபம்:-** குறைகேட்க நேரிடும், கடமையில்தடை தோன்றும், நஷ்டத்திற்கு இடமுண்டு, நாவடக்கம் நன்று, உடல்நலிவு தோன்றும்.

**மிதுனம்:-** வாகனம் செலுத்துவோருக்கு மதிப்புக் கிடைக்கும், தாய்வழித் தன வரவிற்குமிடமுண்டு, கல்வித் துறையிலும் புதிய உற்சாகம் பிறக்கும், சுபதினம்.

**கடகம்:-** வரவேற்க வேண்டிய சம்பவங்கள் இடம் பெறும், உள்ளத்தில் உவகை துள்ளும், பெரிய இடத்துத் தொடர்பு உங்களுக்கு பெருமையைத் தேடித்தரும்.

**சிங்கம்:-** பூமிப்பிணக்கால் வழக்கு விவகாரங்களில் மாட்டிக் கொள்ள நேரிடும். வாகனம் செலுத்துவோர் அவதானம் வேண்டும், சமயோசித புத்தியினால் எதையும் சமாளிக்கலாம்.

**கன்னி:-** குடும்பவழியால் மனதுக்கு நிம்மதி பிறக்கும், நீண்டநாள் பூமிப் பிணக்கு சமரசமாக முடிவடையும், காதல் விவகாரங்களுக்குமிடமுண்டு. சிறப்பானதினம்.

**துலாம்:-** சூழ்ச்சியின் உச்சக்கட்டம் வேதனையில் வீழ்த்திவிடும், ஆழ்ந்த சிந்தனையுடன்காரியத்தில் கண் வைப்பீர், மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடலாம், நிதானம் வேண்டும்,

**விருச்சிகம்:-** இதயத்திற்கு இதம் தரும் செய்தியொன்றும் கிடைக்கலாம், புண்ணிய விருப்பு மேலிடும், அசைவுகள் கூடுதலாக இருக்கும், தலயாத்திரையும் மேற்கொள்ளப்படலாம்.

**தனுசு:-** உத்தியோகத்தில் உயர்வுடன் உரிமையும் கிடைக்கும், உற்சாகமாகக் கடமையாற்றுவீர்கள், உவகைசேரும்.

**மகரம்:-** விவசாயிகள் வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும், எதிர்பாத்த கடன் கிடைக்கும், சிலருக்கு அரசினர் ஆதரவு உண்டு.

**கும்பம்:-** எதிலும்மந்த நிலை தென்படும், சிலருக்கு உடல்நலமும் பாதிக்கப்படலாம். விவசாயிகள் வாழ்க்கையில் நஷ்டத்துக்கு இடமுண்டு, சிந்தனைகளின் சுழற்சியில் சிக்கித்தவிப்பீர்கள், துக்கதினம்,

**மீனம்:-** பக்கத்தில் படுகுழி, பார்த்திருப்பர் பகைவர், விழிப்புடன் இருப்பின் வெற்றி உனதே. பூமிப்பிணக்கைத் தவிர்க்கவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## மணிவிளக்கு

ஏ மனிதா! நீ இருக்கிறபோது மரணம் இல்லை. மரணம் வரும்போது நீ இருக்கப்போவதில்லை. நீ இருக்கிறபோது இருக்க முடியாத ஒன்றுக்காக—மரணத்திற்காக நீ ஏன் அழவேண்டும்?

—ஏ. பி. சூரஸ்

# ஒரு நாடகம் முழுமை பெற அவசியமான அம்சங்கள்

## கருத்தரங்கில் பேராசிரியர் 'வித்தி' விளக்கம்

(யாழ்ப்பாணம்)

''நகைச்சுவையினால் சிலர் நாடகங்களில் மக்களைக் கவரக்கூடும். ஆயினும் கலையம்சம், நடிப்பு, ஒலி, ஒப்பனை என்பனவும் ஒருங்கு சேர்ந்து அமைந்தாலே நாடகம் முழுமையானதாக, தரமிக்கதாக அமைய முடியும்.''

இவ்வாறு யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரியில் சமீபத்தில் நடந்த நாடக அரங்கக் கல்லூரிக் கருத்தரங்கில் உரையாற்றுகையில் சொன்னார்.

பேராசிரியர் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:-

இன்று நாடக அரங்கு. பயிற்சியளித்துவருகிறது. கொழும்பு பல்கலைக் கழகத்தில மாணவருக்கு இப்படியான பயிற்சி அளிக்கப்பட்டுவந்தது. அங்கு கல்வி கற்ற மாணவர்கள் நாடகக் கலையை உயர்த்த வேண்டும் என விரும்பிப் பயிற்சி பெற்றனர். கடந்த 30 வருடங்களாக எனக்கு நாடக உலகுடன் நல்ல தொடர்பு உண்டு. ஆரம்பத்தில் பல்கலைக் கழகத்தில் நாடகம் மேடையேற்றப்பட்டது. 52ம் ஆண்டு முதல் 56ம் ஆண்டுவரை நாடகக் கலை வளர்ந்து வந்தது. அதன்பின் நாட்டில் ஏற்பட்ட கலை விழிப்புணர்ச்சி காரணமாக, பழைய நாடக மரபுகலை புது மெருகூட்டி, நகரத்தவரும் ரசிக்கக்கூடிய வகையில் அமைக்கப்பட்டது.

### நாட்டுக் கூத்து

ஈழத்தின் பல பாகங்களில் நடந்த நாட்டுக் கூத்தை ஆடுபவர்களைக்கொண்டே மேடையேற்றி, பல ஆராய்ச்சி செய்த பின் பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு, சீரிய முறையில் மேடையேற்றப்பட்டது. பழைய மரபு வேடங்களில் புதிய உத்திகளைப் புகுத்தி, சகலரும் ரசிக்கும்வகையில், குறுகிய கால எல்லையில் மேடையேற்றப்பட்டது. மேடை நாடகங்களுக்கு நாடகப் பிரதி மிக மிக முக்கியமாகும் பிரதிபற்றி பலர் கவனம் செலுத்துவதில்லை. நாடக பிரதி இல்லாமல் சில விகடத் துணுக்குகள் கவரக்கூடிய விதத்தில் அமைவது நாடகமல்ல. இது வெறும் ஹாஸ்ய துணுக்குகளேயாகும். நாடக பிரதி எழுதுவது மிக முக்கியம்.

நாடகப் பிரதி இருக்குமானால் நாடகமும் நன்றாக அமையும். நாடகத்தில் ஒலி மிக முக்கியம். நாடகத்தில் பேசுகின்ற தொனி, ஒரே தொனியில் பேச சப்தர்ப்பம் ஏற்றதாக இருக்கவேண்டும். இது எடுத்தாற்போல் செய்ய முடியாது, போதிய பயிற்சிவேண்டும். மேல் நாடுகளில் பரிசோதனை வைத்து எடுப்பார்கள். பேச்சுத் திறமை ஆராய்ந்து நடிகர் தெரிவு செய்யவேண்டும். மேடையில் தோன்றுவது மட்டும் நடிப்பல்ல, மேடையில் நிற்கும் நிலை, உடல் அசைவு எல்லாவற்றையும் கவனிக்கவேண்டும்.

### நாடகத்தில் நகைச்சுவை

சிலர் நகைச்சுவையினால் மக்களைக் கவரக்கூடும். கலையம்ச நாடகம், நடிப்பு முக்கியமாகும். நடிப்பு பேச்சு நன்றாக இருந்தால் பெருமளவில் நாடகம் வெற்றியளிக்கும். இதற்கு ஒலி, ஒப்பனை, அலங்காரம், உடை துணையாக அமையும்.

மட்டுநகரில் ஒரு முறை நாட்டுக்கூத்தொன்றில், முகத்தில் கூட பவுடர் அப்பியிருந்தார்கள். மின்சார வசதி இல்லை பெற்றோல்மாக்ஸ் ஒளியில் தான் நாட்டுக்கூத்து நடந்தது. 'மேக் அப்' எடுபடவில்லை. நாட்டுக்கூத்தில் பாரமான உடைகளையும் 15 றாத்தல் நிறையுள்ள தலைமுடியையும் தாங்கி பல மணி நேரம் நிற்க வேண்டியிருக்கிறது. இதற்கு மாற்றங்கள் செய்யவேண்டும்.

### கலாநிதி சிவத்தம்பி கருத்து

கலாநிதி கா. சிவத்தம்பி கூறியதாவது:

''நாடகம் என்ற கலை வடிவத்தை - சமூக பண்பாட்டினை - தெளிவுப்படுத்தவேண்டும். கோவில் கும்பிடும் பக்தன் அங்கப்பிரதட்ஷணம்சாஸ்டங்க நமஸ்காரம் செய்கின்றார். தெய்வபக்தி காரணமாக இவ்வாறு செய்கின்றான். இதேபோன்று நாடகப் பயிற்சியில் ஈடுபடுபவர்களும் அந்த விஷயத்தை தெளிவாக அறிந்துகொள்ளவேண்டும்.

சமூக ஊடாட்டம் என்றால் என்ன? நாடக சமூக ஊடாட்டம் என்றபோது அதை புரிந்துகொள்ளலாம். நாடகம் கலை சம்பந்தமானது.

கலை, கலைக்காக அல்ல. கலை கலைக்காகத்தான் என்றால் சமூக ஊடாட்டம் பற்றிப் பேசவேண்டியதில்லை. சமூக தாக்கங்கள் கலையை பாதிக்கும். கலை வெறுமனே கலைக்காக அல்ல. காலம் இடம் உட்பட சில சக்திகள் ஒன்று பட்டு ஏற்படுகின்ற தலைமை தான் சமூக ஊடாட்டம் சமுதாய ரீதியாக ஆராய முற்பட்டால் வேறு பல சமூக பொருளாதார அரசியல் பற்றி பேசவேண்டி வரும்.

நாடகக் கலையின் சமூக தளம் என்ன என்பதை அறியவேண்டும். சமூக ஆற்றல் தனிப்பட்ட திறமையை நம்பியிருக்க முடியாது. நாடக சிற்ப கலை தனிப்பட்ட திறமையை நம்பிருக்கிறது. இந்த இடத்தில் கலைஞன், கலை என்ற பொருளில் வேறுபாறுபாடு உண்டு. உடம்பு முழுவதும் நரம்பு இருந்தாலும் உயிர்த்துடிப்பின் தன்மை நாடித் துடிப்பில் தான் உண்டு.

கலைஞன் முழுசமுதாய சக்தியின்ஆணிவேர்அவன்கூறவிரும்பும் நெளிவு விளைவுகளில் ஏற்ற இறக்கங்களில் சமுதாய துடிப்பைக் காணலாம்.

கலை என்று ஒரு குறியீடு அவசியம். சித்திரத்திற்கு குறியீடு உண்டு. சங்கீதத்திற்கு குறியீடு உண்டு. இந்தவிதமான குறியீடுகள் மூலமாகத்தான் கலை வெளியாக தெரியும்.

சங்கீதம் கொஞ்சம் தெரியாமல் ரசிக்க முடியாது. ரசனைக்குகூட சில குறியீடு தேவை. வாழ்க்கை முழுவதும் குறியீடு உண்டு. பெண் குங்குமத்துடன் வந்தால் சகுனம் பிழையில்லை. இது வழக்கப்பட்ட குறியீடு. இதேபோல் சகலவற்றிற்கும் குறியீடுகள் பலருக்குத் தெரியும்.

### பூரண வெளிப்பாடு

நாடகம் என்ற கலை வடிவம் குறிப்பிட்ட கால எல்லைக்குள் தன்னை பூரணமாக வெளிப்படுத்தவேண்டும். வாழக்கை நிகழ்ச்சிகளின் தொகுத்துக்கொள்ளுகின்ற வகையில்தான் பிறப்பு துவங்கியுள்ளது. அன்றாட வாழ்வில் தெரியாத உண்மை தெரிகிறது. படம் பார்ப்பவன் பிச்சைக்காரனாக நடித்தவனைப் பார்த்து நல்லாய் நடிக்கிறான் என்று கூறி அனுதாபப்படுகின்றான். பின் வெளியில் வந்து பிச்சைக்காரனை சந்திக்கும்போது அவனுக்கு பணம் கொடுக்க தயாரில்லை.

நாடகம் சமூக ஊடாட்டம் உள்ள கலையாகும் மனிதர்கள் மனிதசெயல்களை இயல்புகளை ஆடிக்காண்பிப்பதுதான் நாடகம்; நாடகம் ஒருசட்டக் கலைவெறும் செற்களோ இயல்புகளோ அல்லஒவ்வொரு செயலும் மற்ற மனித செயல்களுக்கு இடமளிக்கின்ற செயலாகும் அதிக பின்னணி இயல்புகளாகும்.

### சமுதாய உணர்வு

முழுசமுதாய உணர்வுகளை ஏற்படுத்துகின்ற காலகட்டத்தில் தான் நாடகம் முன்னேறியிருக்கிறது.

கருத்தரங்கிற்கு தலைமை வகித்த அதிபர் ஜே. செல்வரத்தினம் பேசுகையில் கூறியதாவது ''எங்கள் பாரம்பரியமான கட்டடமான நகர மண்டபம் ஆங்கிலப்படமாளிகையாக மாறியிருக்கிறது. நாங்கள் எல்லாரும்பாடுபட்டு திறந்த வெளிஅரங்கை அமைத்தோம். இங்கு எந்த நாடகம் நடாத்தவும் சாத்யமில்லை. இப்படியான கூடத்தில் நாளாந்தம் பயிற்சிபெற முடியாது. இதற்கு வசதியான அமைதியான இடம் வேண்டும். நாடக அரங்கு ஒன்று முக்கியமாகத்தேவை.

நாடகவிமர்சனம் கலந்துரையாடலுக்கு தலைமைதாங்கிய திரு. எஸ். எம். கோபாலரத்தினம் பேசுகையில் நாடகவளர்ச்சிக்கு நாடகமண்டபம் ஒன்று அவசியமென்றும் நவரங்ககலை போன்ற பெரிய மண்டபமொன்று சகல வசதிகளுடன் யாழ்ப்பாணத்தில் அமைய வேண்டுமென்றும் அதற்கு கலைஞர்களின் ஒத்துழைப்பு அவசியமென்றும் கூறினர்.

### டொமினிக் ஜீவா

திரு. டொமினிக் ஜீவா பேசுகையில் முகத்தைக் காட்டி விட்டால் மட்டும் அது நடிப்பாகாதென்றும் சின்னிவிரல் முதல் ஒவ்வொரு அங்கமும் நடிக்க வேண்டும்

[4-ம் பக்கம் பார்க்க]

இப்பொழுது வாங்கலாம்
பிரவுண்சனின் இன்னுமோர் தரமான தயாரிப்பு
பிரவுண்சன் அரறூட்மா
இறக்குமதிசெய்து விநியோகிப்பவர்கள்:
பிரவுண்சன் இண்டஸ்ரீஸ்
80 1/4 பிரைறஸ் பிளேஸ்
கொழும்பு 12.
தொலைபேசி; 27197


பிரவுண்சன் அரறூட்
அரச உணவு மருந்துச் சட்டத்தின் கீழ் உத்தரவாதப் படுத்தப்பட்டது.

## ஈரான் பூகம்பம்:

# 11,000 பேர் பலி; நகர் மண்மேடானது!

தெஹ்ரான், செப். 18 வடகிழக்கு ஈரானில் ஏற்பட்ட மிகப்பயங்கர பூகம்பத்தில் 11 ஆயிரத்துக்குமதிகமானோர்பலியாகியுள்ளனர்என்று பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

13 ஆயிரம் மக்கள் குடியிருக்கும் 'தபஸ்நகரத்தில் 2ஆயிரம் பேர் மட்டுமே உயிர்தப்பியுள்ளனர் என்றும் இவர்களில் அநேகர் பலத்த காயங்களுடனேயே உயிர் தப்பியுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது,

இந்நகரம் இப்போது இடிபாடுகள் நிறைந்த மண்மேடாகக் காட்சிதருகின்றது, மண் மேடுகளின் மேல் உயர்ந்து வளர்ந்த 'பாம்' மரங்கள் மட்டுமே காட்சியளிக்கின்றன.

இப்பூகம்பத்தின்போது பல நூறு மைல்களுக்கு அப்பால் தெஹ்ரானிலும் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

பூகம்பம் ஏற்பட்ட தபஸ்நகருடனுன சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளதால் நிவாரணப்பணிகளை மேற்கொள்வதிலும் பெரும்சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும்தெரிவிக்கப்பட்டது,

### 3 நாட்கள் தேசிய துக்கதினம்

பூகம்பததில் மாண்டவர்களுக்காக ஈரானில் 3நாட்கள் தேசியதுக்கதினம் அனுஷ்டிக்கப்படுகிறது, (இ)

## ரூ. 11,060 பெறுமதிமிக்க கிருமிநாசினி திருட்டு

(வவனியா)

கிளிநொச்சி விளைவுப் பெருக்க குழுகளஞ்சியஅறையிலிருந்து 11,060 ரூபா பெறுமதியான கிருமிநாசினிகள் களவாடப்பட்டுள்ளன. இது தொடர்பாக கிளிநொச்சிப் பொலிசார் புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. பொருட்களும் மீட்கப்படவில்லை. (உ)

## ஹைதராபாத்தில் ஊரடங்குச்சட்டம்

ஹைதராபாத், செப். 18 ஹைதராபாத்தில் நேற்று இடம்பெற்ற குழப்பங்களை அடுத்து அங்கு மீண்டும் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்துக்களின் திருவிழா ஒன்றில் சில முஸ்லிம் பிரஜைகளினுல் கற்கள் வீசி குழப்பம் ஏற்படுத்தப்பட்டதையடுத்து பல வன்முறைச்சம்பவங்கள் இடம்பெற்றதாம். இதையடுத்த ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இம்மாத முற்பகுதியிலும் இங்கு கலவரம் நடைபெற்ற ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ)

## "கலை, கலாச்சாரம் காப்பது எப்படி?"

(யாழ்ப்பாணம்)

"சுதந்திரம் இருந்தால்தான் ஒரு இனம் அதன் மொழியையும் கலை கலாச்சாரத்தையும் பேணிப் பாதுகாக்க முடியும்."

இவ்வாறு குப்பிளான் சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற 7ம் நாள் அலங்காரத் திருவிழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய வசாவிளான் மத்திய மகா வித்தியாலய துணை அதிபர் கவிமணி வி. கந்தவனம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; பக்குவ நிலையில் நின்ற அப்பரும் சுதந்திர வேட்கை உள்ளவராகவே 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று பாடுவதைக் காணுகின்றோம் என்றார். (கு-உ)

## இளைஞர்க்கு இலவச பயிற்சி

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்தவ இளைஞர் சங்கம் யாழ்ப்பாணத்தில் இளைஞர்களுக்கு வெல்டிங் ஆங்கிலப் பயிற்சி, கட்டிட நிர்மாணம் ஆகியதுறைகளில் இலவசமாகப் பயிற்சியளிக்க உள்ளது.

இதற்கான நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணம், சுண்டிக்குளி வை. எம். சி. ஏ. அலுவலகத்தில் நடைபெற்றது.

நூற்றுக்கும் அதிகமான இளைஞர்கள் இந்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்கள்.

'வேள்ட் மிஷன்' ஸ்தாபனம் இப்பயிற்சிகளுக்காக கிறிஸ்தவ இளைஞர் சங்கத்துக்கு உதவியளித்துள்ளது. ]கு]

## ஒரு நாடகம்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

என்றும் கூறினர். இந்த நடிப்புக் கல்லூரியின் பலர் பலன் 10 வருடத்திற்குப் பின்பு தெரிய வருமென்றும் அப்போது அவர்களின் நடிப்ப பயிற்சிபட்டதென்று தெரியுமென்றும் கூறினர் சின்னப் பாத்திரமானலும் பயிற்சி பட்ட நடிப்பினுல் அது பளிச் என்று தெரியுமென்றும் அவர் கூறினர்.

### சிவகுமாரன் பேச்சு

திரு. கே. எஸ். சிவகுமாரன் கூறியதாவது இலங்கையில் நாடக விமர்சனை முறையிலலை சிறுகதை நாவல் விமர்ச்சன வளர்ச்சி இருப்பது போல் நாடக விமர்சனம் இல்லை.

ஆரம்பகாலத்தில் நடந்தவை உண்மையில் நாடகமல்ல நல்ல நாடங்கள் மிக அண்மையில் தாயாரித்து நடிக்கப்பட்டவையாகும். சிலர் பொழுதுபோக்கு நாடகம் என்ற பெயரில நாடகத்தை தயாரித்தனர். சிலவருடங்களுக்கு முன் பல கலைக்கழக மட்டத்தில் வேறு கோணங்களிலும் செம்மையான முறையில் பயிற்சி பெற்று மேடையேற்றப்பட்டன.

நல்ல நாடகங்கள் எழுதப்படவேண்டும் பிறமொழி நாடகத்தை பார்ப்பதன் மூலம் ஈழத் தமிழ்நாடகத்தை முன்னேற்றலாம்.

விமர்சனம் தனிப்பட்ட ஒருவன் அறிவு, அனுபவம் ஆகியவற்றின் எல்லைக்கூட்டுக்குள் அமைந்த வெளிப்பாடு முடிர்தமுடிவல்ல ஒரு மறைவிமர்சிக்கவர் மற்ற முறை பார்க்கும் போது கருதமைத மாற்றி தெரிவித்திருக்கிறார் விமர்சனப் பல பாணியில் அமைகின்றன நாடகம் என்பது தனியான ஒருதுறை யென்றுகூறமுடியாது. பலதுறைகளைக் கொண்டதாக இருக்கின்றது

கலந்துரையாடலைத் தொடர்ந்து நாடகம் தயாரித்தல் பற்றி களப்பயிற்சியப் ஒப்பனை உடை ஒளி பற்றிய களப்பயிற்சியும் இடம் பெற்றன

## முமொழித் திட்டத்தை தமிழ்நாட்டில் அமுல்செய்க

### ஜனதா கட்சி கோரிக்கை

சென்னை, செப். 18 தமிழ்நாட்டில் மும்மொழித் திட்டத்தை அமுல் செய்யுமாறு தமிழ்நாடு ஜனதாகட்சி மத்திய அரசைக் கோரியுள்ளது.

ஜனதா கட்சியின் தமிழ் நாட்டுக்கிளை காரியக்கமிட்டி நேற்று கூடியபோதே அரசைக் கோரும் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மகாத்மா காந்தி, காமராஜர், ஜெயப்பிரகாஷ் நாராயண் ஆகியோரின் பிறந்ததின விழாக்களை அடுத்தமாதம் 2ம் திகதி முதல் 11ம் திகதிவரை தமிழ்நாட்டில் கொண்டாடுவதென்றும் ஜனதா கட்சி தீர்மானித்துள்ளது. (இ)

## பாஷையூர் வீடமைப்பு 49 நாட்களில் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

அரசின் தொகுதி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் பாஷையூரில், ஒரு லட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட வீடுகள் 49 நாட்களில் பூர்த்தியாகியுள்ளன.

இவ் வீடுகளைப் பார்வையிட்ட யாழ்ப்பாண எம் பி. திரு. வி. யோகேஸ்வரன் இதற்குப் பொறுப்பான கட்டட திணைக்கள மாவட்ட பொறியியலாளர் திரு. கணேசலிங்கத்தையும், மற்றும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களையும், தொழிலாளர்களையும் குறுகியகாலத்தில் கட்டிமுடித்ததற்காகப் பாராட்டினர்.

இத்திட்டத்தின் கீழ் 5 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வீடுகள் ஒவ்வொன்றும் ஒன்றரைப்பரப்பு காணியில், 600 சதுரஅடியுடைய கட்டடங்களாகும். ஒவ்வொரு வீட்டிலும் இரு படுக்கையறையும். சமையலறையும் முன்னும், பின்னும் விறுந்தையும் நீரடைப்புமலகூடமும், கிணறும் அடங்கியுள்ளது.

## துப்பாக்கி கொள்ளை வழக்கு:

# பிணைமனுபற்றி இன்று பொலிஸ் அபிப்பிராயம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதிமன்றத் துப்பாக்கி கொள்ளை தொடர்பாக பொலிஸாரின் அபிப்பிராயம், இன்று காலை சாவகச்சேரி நீதிபதி கே. பாலகிட்ணர் முன்னிலையில் தெரிவிக்கப்படவிருக்கிறது.

இக்கொள்ளை தொடர்பாக கைதான 42 தமிழ் இளைஞர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள், கடந்த தவணையின்போது சந்தேக நபர்களைப் பிணையில் விடுமாறு வாதிட்டனர்.

இதுபற்றி பொலிஸாரின் அபிப்பிராயங்களை அறிவதற்காக வழக்கு இன்று காலைவரை பின்போடப்பட்டது.

சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான ஜி ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்), ஆர். ஈ. தம்பிரத்தினம், ஜிம்மி ராஜரத்தினம், எஸ். லோகேஸ்வரன், கே. பரமசிவம்பிள்ளை, கே. கிருஷ்ணகுமார், பி. பாலசுப்பிரமணியம், கே. விஞேதன், கே. மஞேகரன் ஆகியோர் ஆஜராஞர்கள், (க)

## கட்டுவன் முனியப்பர் ஆலய கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கட்டுவன் தெற்கு - ஏழாலை மேற்கு முனியப்பர் ஆலயத்தில் பலியிடுவது நிறுத்தப்பட்டு, முனியப்பர் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டு வருகிறது.

ஆலயம் தோன்றிய காலம் முதல் ஆடு, கோழி பலியிடுவது வழக்கமாக இருந்துவந்தது. இவ்வருட பலியிடும் உற்சவத்தின்போது கட்டுவன் தெற்கு பாரதி சனசமூக நிலைய நிர்வாகிகள் போஷகர் திரு. எம். தருமமூர்த்தி தலைமையில் சுன்னுகம் பொலிசில் பலியிடுவது நிறுத்தப்படவேண்டும் என புகார் தெரிவித்தனர். பொலிசார் தலையிட்டும ஆலயத்தின் முன்னுலுள்ள பிரதான வீதியில் வைத்து சில ஆடுகள் பலியிடப்பட்டன தொடர்ந்து மேற்படி நிர்வாகிகள் சுன்னுகம் பொலிசில் முறைப்பாடு தெரிவித்துமல்லாகம் நீதிமன்றத்தில் இதுசம்பந்தமாக வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளார்.

சென்றவாரம், குப்பிளான் கற்கரை கற்பகவிநாயகர்ஆலய பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ குமாரராசக்குருக்கள் தலைமையில் பிரம்மஸ்ரீ ந. ராதாகிருஷ்ண சர்மா. பிரம்மஸ்ரீ ஸ்ரீசரசர்மா ஆகியோர் கும்பாபிஷேகம் ஆரம்பிக்கப்பட்டு முனியப்பர் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. தொடர்ந்து 48 நாளும் கும்பாபிஷேசம நடைபெற்று சங்காபிஷேகத்துடன் முடிவடையும். மேற்படி ஆலயத்தில் தினமும் பஜனைக்கச்சேரி நடைபெறுகிறது.

ஆலயத்திருப்பணிச் சபையினரால் திருப்பணி வேலைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (உ-ஈ)

## புதிய அதிபர்

(யாழ்ப்பாணம்)

சுன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் சில வருடங்களாக கனிஷ்டபிரிவு அதிபராகக் கடமையாற்றிய ஆசிரியர் திரு. அப்புத்துரை தற்பரானந்தன் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையின் அதிபராக பதவி உயர்வு பெற்று இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் வடபிரதேசக் கிளையின் நிர்வாகிகளில் ஒருவரான இவர் கொழும்பு இந்துக் கல்லூரி (கனிஷ்ட பிரிவு) வெற்றிலையூர் தமிழ் மகா வித்தியாலயம் உட்பட பல பாடசாலைகளில்கடமையாற்றியுள்ளார். இவர் திருக்கேதீஸ்வரத் திருப்பணிச்சபை, இந்து மாமன்றம் போன்ற ஸ்தாபனங்களின் முக்கிய பிரமுகருமாவர். (இ)


Melville Arrauw Designs

BAYER

விவசாய இரஷாயனப் பொருள்

சேர்கோப்பூர் 36/.

பாவித்து

நெற்பயிரைத் தாக்கும் எல்லாக் களைகளையும் கட்டுப் படுத்தவும்

தயாரித்து விநியோகிப்போர்

ஹேகெம் லிமிட்டட்

400, டின்ஸ் வீதி, கொழும்பு தொலைபேசி : 93563 - 96331 - 6

Rio (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
Born Black
(Adults Only)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
ராமன் தேடிய சீதை

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45. 10-00
எம். ஜி, ஆர்.-ஜெயலலிதா
கணவன்

வின்ஸர் போன்: 466 தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர்.-முத்துராமன் ஜெயலலிதா-சோ நடித்த
ஒரு தாய் மக்கள்
(புதிய பிரதி)

REGAL (Jaffna) Phone: 360
Daily 4-30, 7-00,& 9-30 p. m.
Glendo Jackson, Oliver Reed in
THE TRIBLE ECHO
(Color-adults only)

ராணி தினசரி 4 காட்சிகள்
(யாழ் நகர்)
சிவாஜி-மஞ்சுளா நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) கடைசி சில தினங்கள்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயகுமாரி-எஸ்.எஸ்.ஆர்.-தேவிகா நடித்த
சாந்தி

ராஜா தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
சிவகுமார்-விஜயகுமார் ஜெய்சித்ரா-தங்கவேலு
பொண்ணுக்கு தங்கமனசு
(புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஆலயமணி
(புதிய பிரதி)

லிடோ போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்)
தாய்க்குத்தலைமகன்

மனோகரா தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
சிவாஜி - தேவிகா
ஆண்டவன் கட்டளை
புதிய பிரதி

சாந்தி போன்: 7642.
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி - கே. ஆர். விஜயா
செல்வம்
(புதிய பிரதி)

## ரயில் விபத்தில் 29 பேர் பலி!

கெய்ரோ, செப். 18
எகிப்தில் இரண்டு ரயில்கள் எதிரெதிரே மோதிக்கொண்டதில் 29 பேர் பலியாகினர் என்றும் 50 பேர் படுகாயம் அடைந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

## திருட்டு

(வவனியா)
வவனியா பசளை கூட்டுத்தாபன களஞ்சிய அறையிலிருந்து 2000 பசளை உறைகள் திருடப்பட்டுள்ளன. இதுதொடர்பாக இரவுக்காவலாளியும் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதுபற்றிய விசாரணையில் ஈடுபட்ட பொலிசார் பல கடைகளிலிருந்து களவுபோன பொருட்களையும் மீட்டுள்ளார்களாம் விசாரணை தொடர்கிறது. (உ)

## துப்பாக்கிகள் கடத்தல் வழக்கு

(யாழ்ப்பாணம்)
ஜீப்பில் துப்பாக்கிகள் கடத்தியது தொடர்பான வழக்கு இன்று மல்லாகம் நீதிமன்றத்தில் கூப்பிடப்படவிருக்கிறது.
கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் ஜீப்பில் துப்பாக்கிகளுடன் சில இளைஞர்கள் கடற்படையினரால் பட க்கிப்பிடித்தது தொடர்பாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## வாகனங்கள் சோதனை

(நெல்லியடி)
நெல்லியடி, மந்திகை, ருத்தித்துறை, உடுப்பிட்டி, மணற்காடு போன்ற சந்திகளில் பொலிஸ், ராணுவம் என்பன கூட்டாக நேற்று வீதிகளில் சென்றுகொண்டிருந்த வாகனங்களை நிறுத்தி சோதனையிட்டன. அரசாங்க வாகனங்கள் இ. போ. ச. பஸ் வண்டிகள் கூட்டுறவுத்துறை வாகனங்களும் சோதனையிடப்பட்டன. (உ)

## பொலிஸ் விசாரணையில் எண்மர்

(நெல்லியடி)
நெல்லியடி - கரவெட்டி பகுதிகளில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற துணிகரக கொள்ளைகள் சம்பந்தமாக இதுவரை சுமார் எண்மர்பருத்தித்துறை பொலிசாரினால் சந்தேகத்தின்பேரில் விசாரணைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.
நெல்லியடி பஸ் நிலையத்திலுள்ள புத்தகசாலை ஒன்றில் நடந்த திருட்டு சம்பந்தமாக இருவரும், கரவை வெல்லனிற் பிள்ளையார்ஆலய திருட்டு சம்பந்தமாக அறுவரும் விசாரணைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். (உ)

### பௌர்ணமிக் கலைநிகழ்ச்சிகள்:

# வர்த்தகர் உதவி கோருகிறார் யாழ். விசேட ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)
''பௌர்ணமி தினக் கலை நிகழ்ச்சிகளை'' மாதந்தோறும் யாழ். திறந்தவெளி அரங்கில் ஒழுங்கு செய்து அளிப்பதற்காகும் செலவுகளைப் பொறுப்பேற்க முன்வருமாறு வர்த்தக தாபனங்களையும், அவற்றின் உரிமையாளர்களையும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக யாழ். விசேட ஆணையாளர் திரு. கே. சிவஞானம் தமது வேண்டுகோளில் கூறியிருப்பதாவது:-

''பௌர்ணமி தின கலை நிகழ்ச்சிகளில்'' பங்கு கொண்டு கலை நிகழ்ச்சிகளை அளிக்கும் கலைஞர்களுக்கான கௌரவப் பணத்தையும் மற்றும் சம்பந்தப்பட்ட சில்லறைச் செலவுகளையும் மேற்படி வர்த்தக தாபனங்கள் தாமாகவோ அல்லது மாநகர சபை ஊடாகவோ தாம் விரும்பிய படியாக செலவு செய்வதற்குப் பொறுப்பேற்கலாம்.

யாழ்ப்பாண மாநகரசபையைப் பொறுத்தமட்டில் ''பௌர்ணமி தினக் கலை நிகழ்ச்சிகளுக்கு'' யாழ். திறந்தவெளியரங்கினை இலவசமாக உபயோகிப்பதற்கு கலைஞர்களை அனுமதிப்பதுடன் மின்சார, ஒலிபெருக்கி வசதிகளையும் இலவசமாக அளித்து கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து, கலைஞர்களைத் தெரிந்துகொள்வதற்கும் தானே பொறுப்பாக இருக்கும் இது விடயத்தில் வர்த்தக தாபனங்களின் பரிந்துரை கவனத்திற் கொள்ளப்படும். ஆயின் பொறுப்பு சபையினுடையதாகவே இருக்கும்.

''பௌர்ணமி தின கலை நிகழ்ச்சிகளுக்கு'' தரமான கலைஞர்களை ஏற்பாடு செய்வதற்கான செலவுகளைப் பொறுப்பேற்பதற்காகவே யாழ்ப்பாண மாநகரசபை வர்த்தக தாபனங்களதும், அவற்றின் உரிமையாளர்களதும் உதவியை நாடி நிற்கின்றது. இந்த உதவிக்குக் கைமாறாக மேற்படி நிகழ்ச்சிகளின் போது, நிகழ்ச்சிகளுக்கு முன்னதாகவும் நிகழ்ச்சிகளின் பின்பும் சம்பந்தப்பட்ட கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதற்குப் பொறுப்பேற்றுக் கொண்ட தாபனத்தின் பெயர் மற்றும் விபரங்களை ஒலிபெருக்கிமூலம் ரசிகர்களுக்கு சபை விளம்பரப்படுத்தும். 'பௌர்ணமி கலை நிகழ்ச்சி'' சம்பந்தமாகச் சபை வெளியிடும் துண்டுப்பிரசுரங்களிலும் நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பேற்கும் தாபனத்தின் பெயர் குறிப்பிடப்படும்.

இது விடயமாக யாழ்ப் மாநகரசபைக்கு உதவ விரும்பும் சகல வர்த்தக தாபனங்களையும், அவற்றின் உரிமையாளர்களையும் நேரடியாகவோ அல்லது கடித மூலமாகவோ எம்முடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

ஒருவருடத்தில்ஆகமொத்தம் பன்னிரு பௌர்ணமி தினங்களே வருவதாலும் அவற்றிலும் மாரிகாலத்தில் மழை காரணமாக இரண்டொரு கலைநிகழ்ச்சிகளைத தவிர்க்க வேண்டியிருப்பதாலும் இந்த வாய்ப்பை ஏசமாக எல்லோருக்கும் வழங்க முடியாத நிலைமை யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்திற்கு உள்ளது. ஆகவே இந்த வாய்ப்பை விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறும் திகதிகளின் அடிப்படையில் முன்னுரிமை தந்து ஒழுங்கு செய்வோமென உறுதி தருகிறோம.'' (உ)

### யாழ். மேல் நீதிமன்ற முதல் அமர்வு:

# சட்டத்தரணிகள் தமிழில் உரை!

(யாழ்ப்பாணம)
யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தின் முதலாவது அமர்வு நேற்று மேல் நீதிமன்ற நீதிபதி ஜனாப் எம். ஜமீல் முன்னிலையில் ஆரம்பமானது

நேற்றுக்காலை 9 மணிக்கு நீதிபதி ஜனாப் ஜமீல் உத்தியோக அங்கி தரித்து வந்த போது கட்டியங் கூறுபவர் வழக்கம்போல் தமிழில் கட்டியம் கூறினர்.

எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளும் தமிழ் மொழியில் தங்கள் உரைகளை நிகழ்த்தினர்கள்.

வவனியா மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு இருந்த 3 வழக்குகள் கூப்பிடப்பட்டு அவ்வழக்கு எதிரிகளிடம், இவ்வழக்கு யாழ்ப்பாண நீதிமன்றததில விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேல் நீதிமன்றம நாளை காலைவரை ஒத்தப்போடப்பட்டுள்ளது. (க)

### திருநெல்வேலி வங்கி

# கொள்ளை முயற்சி

## வழக்கு ஒத்திவைப்பு

(யாழ்பபாணம்)
திருநெல்வேலி வங்கி கொள்ளை முயறசி வழக்கு நேற்று யாழ் மேல்நீதிமன்றத்தில, நீதிபதி ஜனாப் எம்.ஜமீல முன்னிலையில் எடுக்கப்பட்டது.

இவ்வழக்கில் 75 மே 19 ம் தேதி திருநெல்வேலி கிராமிய வங்கியில் முகாமையாளர் த. அருணாசலத்திடமிருந்த பணத்தை கொள்ளையடிக்கும் முயற்சிக்கு உடந்தையாக இருந்ததாகவும், வேயபராயில் வேறும் சிலருடன் சேர்ந்து வேலுப்பிள்ளை விஜசித்தம்பியின்காரை கடத்தியதாகவும், செ தனபாலசிங்கம மீது குற்றம் சாட்டப்பட்டிருநதது.

எதிரிசார்பில் சட்டத்தரணி சி. நாகராஜா ஆஜரானர், அரசதரப்பில் சட்டத்தரணி ஆர். ஸ்ரீரஞ்சன் ஆஜரானர்

இவ்வழக்கு நவம்பர் 29ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

### புத்தூர் கொலை முயற்சி

புத்தூர் கொலை முயற்சி வழக்குப், நேற்று யாழ. மேல் நீதிமன்றத்தில், நீதிபதி ஜனாப் எம். ஜமீல் முன்னிலையில் எடுக்கப்பட்டது.

இவ்வழக்கில் புத்தூரில், சடையன் வயிரமுத்துவை கொலை செய்ய முயற்சித்ததாக சி. கிட்ணன், க, வல்லிபுரம், எஸ். மார்க்கண்டு, நா. கணேசு ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி வி. என். நவரத்தினம் நேற்று ஆஜராகவில்லை சட்டததரணிகள் கே. பி எஸ். வரதராஜா, எஸ். சுரேந்திரன் ஆகியோர்நேற்று ஆஜரானர்கள்.

இவ்வழக்கு செப்டம்பர் 27ம தேதிக்கு பின்போடப்பட்டது.

### சுன்னாகம் கொலைமுயற்சி

சுன்னாகம் கொலைமுயற்சி வழக்கு நேற்று யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜமீல் முன்னிலையில் கூப்பிடப்பட்டது.

[6-ம் பக்கம் பார்க்க]

# காம்ப்டேவிட் மகாநாடு: மூல அறிக்கையில் சதாத்-பெகின் கைச்சாத்து!

## அமெரிக்க அதிபரின் முயற்சிக்குப் பாராட்டு

மேரிலாண்ட், செப். 18

காம்ப்டேவிட் மகாநாட்டின் இறுதியில் மத்திய சமாதானம் குறித்த சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த மூல அறிக்கையில் எகிப்திய அதிபர் ஜனுப் அன்வர் சதாத்தும் இஸ்ரேலிய பிரதமர் திரு. பெகினும் நேற்று கைச்சாத்திட்டனர்.

இந்த மூல அறிக்கைக்கு அமைய இன்னும் மூன்று மாத காலத்தில் இருநாடுகளுக்குமிடையே சமாதான உடன்படிக்கை ஒன்றைச் செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

விரைவில் பலஸ்தீன மக்களின் உரிமைக்கு உத்தரவாதமளிப்பதென்றும் இந்த மூல அறிக்கையில் உறுதிதெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சமாதான அறிக்கை குறித்து அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மிகார்ட்டர் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:



### காட்டர் கருத்து

காம்ப்டேவிட் மகாநாட்டில் கிடைத்த வெற்றி இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் மட்டுமல்லாது மனித சமுதாயத்துக்குமே கிடைத்துள்ள பெரு வெற்றியாகும்.

### சதாத் கருதுத்

காம்ப்டேவிட் உச்சிமாநாட்டைக் கூட்டிய திரு. கார்ட்டரின் துணிகர முயற்சியை எகிப்திய அதிபர் ஜனுப் அன்வர் சதாத் பெரிதும் பாராட்டியுள்ளார்.

பெரிதும் இக்கட்டான நிலையில் திரு. கார்ட்டர் இம் மகாநாட்டைக் கூட்டினார் என்றும் எமதுகாலத்தில இதுபோன்ற முயற்சி வேறு எவராலும் முடியாது என்றும் ஜனுப் சதாத் கூறினார்.

### பெகின் கருத்து

எகிப்தில் பிரமிட்டுக்களை அமைக்க மேற்கொள்ளப் பட்ட முயற்சியைவிட காம்ப்டேவிட் மகாநாட்டைக் கூட்டியது அரும்பெரும் முயற்சியாகும் என இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் கருத்துத் தெரிவித்துள்ளார்.

---

## கல்விப் பணிப்பாளருக்கு இப்படி ஒரு அனுபவம்

(யாழ்ப்பாணம்)

புத்தூரிலுள்ள பாடசாலையொன்றைப் பார்வையிடச் சென்ற வடமாநில கல்விப் பணிப்பாளர் கால்கடுக்க காத்து நின்றபோதும், காலை 8 மணிக்கு தொடங்கவேண்டிய பாடசாலைக்கு ஆசிரியை ஒருவரைத்தவிர மற்றைய ஆசிரியர்கள் 8-30 மணிக்குத்தான் பாடசாலைக்கு வருகை தந்தனர்.

இந்த அனுபவம் நேற்று யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகருக்கு ஏற்பட்டது.

சமுகக் குறைபாடுகளை ஒழிப்பதில் தீவிரம் காட்டப்படும் இந்நாட்களில் இப்படியான சப்பவமொன்று நடைபெற்றதை கவலையோடு தெரிவித்த அவர் பாடசாலைக்குத் தாமதித்து வந்த சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் கூறினார்.

245 மாணவர்கள் கல்வி பயிலும் புத்தூர், புத்தசலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தில 9 ஆசிரியர்கள் உள்ளனர், கல்விப் பணிப்பாளர் காலை 7-30 மணிக்கு அங்கு சென்று காத்திருந்தபோது 8 மணிக்கு ஒரு ஆசிரியை மாத்திரம் சமுகமளித்திருந்தார். ஏனைய ஆசிரியர்கள் 8-30 மணிக்கு பின்னரே பாடசாலைக்கு வந்தனர்.

பாடசாலை அதிபர் உட்பட ஆசிரியர்களை எச்சரித்த கல்விப்பணிப்பாளர், அப்பகுதி வட்டாரக் கல்வி அதிகாரியிடமும் இச்சம்பவம் பற்றி கவலை தெரிவித்துள்ளார். [கூ]

---

## கொள்ளை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வழக்கில், சுன்னகத்தில் செல்லத்துரை அல்லது ஐயக்கோனை சுட்டுக்கொலை செய்ய முயற்சித்ததாக செ. மகேந்திரராஜா ஆ. தம்பிராஜா, எஸ் சீவரத்தினம் ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, எஸ் லோகேஸ்வரன் இவ்வழக்கில் சிரேஷ்ட சட்டத்தரணியானபாலாதம்புவராததினல் தவணைதருமாறு கேட்டுக்கொண்டார்.

இவ்வழக்கு டிசம்பர் 4-ம் தேதிக்கு பின் போடப்பட்டது.

**CAR PERMIT**
Car Permit For Sale
Under New Rules.
Contact: R. Seinthan,
Raja Giri, Chulipuram.
0363

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone: 389 - Registered as a Newspaper in SriLanka.

---

## விசேட பூசை

(பண்டத்தரிப்பு)

ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் 72-வது பிறந்தினத்தை முன்னிட்டு காங்கேசன்துறை தொகுதி ஐக்கிய தேசியக்கட்சி மத்திய குழுவினரால் அளவெட்டி பெருமாள்கடவை பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூசையொன்று நடாத்தப்பட்டது. திரு எஸ். கே. என். சிவராஜாவும் மற்றும் பலஉறுப்பினர்களும் இப்பூசையில் கலந்து கொண்டனர்.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு ஒரு வாழ்த்துத் தந்தியையும் திரு. எஸ். கே. என் சிவராஜா அனுப்பி வைத்துள்ளார்.

---

## "அமரர் வன்னியசிங்கத்தின் இலட்சியத்தைப் பின்பற்றுவோம்"

### நினைவு தினத்தில் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

"இன்று அமரர் வன்னியசிங்கம் உயிருடன் இருந்திருந்தால், 25 வருடங்கள் கட்டிக்காத்த தமிழரசுக் கட்சியை அழியும் நிலைக்கு விட்டிருக்கமாட்டார் தமிழரசுக் கட்சியும், தமிழ்க்காங்கிரஸ் கட்சியும் இணைந்ததே தமிழர் விடுதலைக் கூட்டணி. கட்சிகள் இணைந்தனவே யொழிய முழுமையான ஒற்றுமை அவர்களிடத்தில காணப்படவில்லை" என்று நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமரர் வன்னியசிங்கத்தின் நினைவுதின விழாவில் முன்னாள் செனட்டர் திரு. எஸ். நடராசா பேசுகையில் கூறினார்.

இவ்விழா இருபாலைச் சந்திக்கு அண்மையில் கோப்பாய் எம். பி திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. தேசியகீதத்துடன் ஆரம்பமான விழாவில் பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டனர். திரு. எஸ். நடராசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

"இன்று அமரர் வன்னியசிங்கம் உயிருடன் இருந்தால், இப்படியானதொரு அணியை விரும்பியிருக்கமாட்டார்" அவர் பாராளுமன்றத்துக்குத் தானாக செல்லவில்லை. தந்தை செல்வாவின் வேண்டுகோளை மதித்து பாராளுமன்றம் சென்றார். இன்று நாம் அன்னாருக்கு செய்யும் அஞ்சலி அவரது வீரஇலட்சியததை பின்பற்றிச்செல்வோம்"'

யாழ்ப்பாண எம் பி. திரு. வெ. யோகேஸ்வரன் உரையாற்றுகையில், "அமரர் வன்னியசிங்கத்தை எனக்கு நேரடியாகத் தெரியாதுபோனலும் அவரைப்பற்றி பலநூல்களில் அறிந்திருக்கிறேன். அவருடைய காலத்து அரசியல் நிலை வேறு, இன்றைய நிலை வேறு. தமிழ்மக்கள் தேர்தலில் எமக்கிட்ட ஆணையை நிறைவேற்றியே தீருவோம், விரைவில் தமிழ் ஈழம் பெறுவோம்" என்றார்.

உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராஜலிங்கம் பேசுகையில், "அமரர் வன்னியசிங்கம் அன்றே சமூகக்குறைபாடுகளை ஒழிப்பதற்கு தீவிரமாக உழைத்தார். அவர் கண்ட கனவு இன்று நனவாகும்வகையில் சமூகக்குறைபாடுகளை ஒழிக்க தமிழர் விடுதலைக் கூட்டணி ஆர்வம் காட்டியுள்ளது" என்றார்.

மானிப்பாய் எம். பி. திரு. வி தர்மலிங்கம் உரையாற்றுகையில், "இன்று வன்னியனார் உயிருடன் இருந்திருந்தால் தனிநாடு கோரிக்கையை ஆதரித்திருப்பார். சிங்களமக்களுடன் தமிழ்மக்கள் சேர்ந்து வாழமுடியாது என்று அன்றே தெரிவித்தவர் அவர். அன்னாரது முயற்சியினால்தான் 56ல் சத்தியாக்கிரகம், பண்டா—செல்வா பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது" என்றார்.

விழாவில் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், சட்டத்தரணி கனக. மனோகரன், வண்ணை ஆனந்தன், செல்வி மாலா சின்னத்துரை உட்படப் பலர் உரையாற்றினர். (கெ)

---

## "ஆசிரியர் கடமை வகுப்பறையுடன் மட்டும் நின்றுவிடுவதல்ல"

(இமையாணன்)

"ஆசிரியர்கள் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளவேண்டும் உலகில் இன்று பல பிரச்னைகள் நிறைந்துகாணப்படுகின்றன. ஆசிரியர்கள் வகுப்பறையில் மட்டுமல்லாது வெளியே பெற்றோருடனும் மற்றோருடனும் நன்கு அளவளாவி பிரச்னைகளைத் தீர்க்கவேண்டும். சூழலைப்பற்றியும் அறிந்திருக்க வேண்டும்."

இவ்வாறு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கல்வி, கலாச்சாரப் பகுதியின் ஆசிய பசுபிக் ஒலிபரப்பு நிலைய இயக்குநர்களில் ஒருவரான திரு. ஆர். குணசிங்கம் கொழும்புத்துறை ஆசிரியகலாசாலையில் பேசும் போது கூறினார்.

ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் மத்தியில் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மலேஷிய வானொலியில் கடமையாற்றும் இவர் இலங்கையில் அறிமுகப்படுத்தப்படவிருக்கும் தொலைக்காட்சி சம்பந்தமாக இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

அதிபர் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தொலைக்காட்சி சம்பந்தமான பல கேள்விகளுக்கும் விளக்கங்களைக் கொடுத்தார்.

'தொலைக்காட்சியினைல்புற்றுநோய் ஏற்படும்' என்ற ஒரு செய்தி சம்பந்தமான கேள்விக்கு இவர் மறுப்புத் தெரிவித்து அது "தவறு" என்றும் தொலைக்காட்சியினல் புற்றுநோய் வரமாட்டாது என்றார்.

"மற்றைய நாடுகள் முன்னேறிக்கொண்டே போகும் பொழுது இலங்கை மட்டும் ஏன் பின்னே நிற்கவேண்டும்? உதாரணமாக வளரும் நாடுகளில் ஒன்றான இந்தோனேசியா எவ்வளவோ முன்னேறிக் கொண்டேபோகின்றது. அந்நாட்டு மக்களும் நன்றாக முன்னேற்றமடைந்துவருகிறார்கள். அதேபோல் வளரும் நாடுகளில் ஒன்றான இலங்கையும் - இந்நாட்டு மக்களும் நன்கு முன்னேறவேண்டும். அதற்குத் தொலைக்காட்சி மிக முக்கியமாகும், தொலைக்காட்சி மூலம் தொழில்நுட்பக் கல்வி, விவசாயப் பயிற்சி போன்றவற்றை அளிக்கலாம்.

இத்தொலைக்காட்கிஉடனடியாக வீடுகள் தோறும அமைக்கவேண்டும என்ற அவசியம இல்லை. படிப்படியாகச் செய்யலாம். படிப்படியாகச் செயவதால் பிழைகள் தவிர்க்கப்படலாம், அத்துடன் செலவும குறைவாகவே ஏற்படும, அதாவது நியாயமற்ற கல்வி அளிக்கும ஸ்தாபனங்களான சனசமூக நிலையங்கள, பூங்காக்கள், கோவில்கள் போன்ற பொதுத்தாபனங்களில் காட்டுவதால் செலவைக் குறைத்துக் கொள்ளலாம்.

---

## 'காசி' உட்பட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர்களின் பிணைமீதான மனுமீது தீர்ப்பளிக்கையில், 'காசி' உட்பட ஏழு இளைஞர்களை தலா பத்தாயிரம் ரூபா பிணையில் விடுதலை செய்வதாகவும். நான்கு இளைஞர்களை தலா500ரூபா பிணையில் செல்ல அனுமதிப்பதாகவும்கூறி, அக்டோபர் மாதம் 5ம் திகதி இவர்கள் மீதான வழக்கு தீர்ப்பு வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

இத் தீர்ப்பு வெளியான சில நிமிடங்களில் "இந்த பதினொரு தமிழ்இளைஞர்களும் அரசுக்கு எதிராக சதிசெய்ததாகவும் கூட்டங்கள் நடத்தி பொதுமக்களைத் தூண்டியதாகவும், பஸ்ஸுக்கு கைக்குண்டு வீசியதாகவும் புதிய வழக்கு ஒன்றை பொலிசார் பதிவுசெய்து இவர்களை றிமாண்டில் வைக்க அனுமதிக்குமாறு கோரினர்.

புதிய அரசியலமைப்பின் கீழான சட்டத்தின்படி இந்த வழக்கு பதியப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட நீதிபதி, பிணையில் விடுதலைசெயயப்பட்ட தமிழ் இளைஞர்களை மீண்டும் அக்டோபர் மாதம் 22ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ம)

---

## தொழிற்சங்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டங்கீட்டுமுறை மீண்டும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

"நசுக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட சகல ஜனநாயக உரிமைகளும் குடியியல் சுதந்திரங்களும் மீண்டும் வழங்கப்படவேண்டும். தொழிற்சங்கங்கள் மீதான தாக்குதலையும், அரசசேவைகளிலும், அரச கட்டுப்பாட்டின் கீழுள்ள நிறுவனங்களிலும் சுதந்திரமான தொழிற்சங்க நடவடிக்கைகள் மீதான அடக்குமுறையையும் உடன் நிறுத்தவேண்டுவதுடன் பறிக்கப்பட்ட தொழிலாளர் உரிமைகள் மீண்டும் வழங்கப்பட வேண்டும்

தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காகவும், அரசியல் அல்லது மற்றும் காரணங்களுக்காகவும் வேலைநீக்கம், பதவியை கைவிட்டுச் சென்றதாகக் கருதுதல், வேலை இடைநிறுத்தம் அல்லது இடமாற்றம் போன்ற உத்தரவுகளையும் மற்றும் பழிவாங்கல் நடவடிக்கைகளையும் வாபஸ் பெறவேண்டும்.

"அனைத்து துறைகளிலும் உள்ள எல்லா தொழிலாளர்களுக்கும் ரூபா 150/- இடைக்கால சம்பள அல்லது ஊதிய அதிகரிப்பை உடனடியாக வழங்கவேண்டும் உண்மையான வாழ்க்கைச்செலவு அதிகரிப்புக்கு ஈடுகொடுக்கும் முறையில் சம்பளததை சரிப்பத்தும் வகையில் ஒவ்வொரு துறைகளுக்குமான சம்ளமும் ஊதியமும் மறுசீரமைட்டுச் செய்யபபடும் வரை அதிகரிக்கும வாழ்க்கைச்செலவு புள்ளி ஒவ்வொன்றுக்கும் இயல்பாகவே ரூபா 2-50 சம்பள அதிகரிப்பை வழங்கும்முறை கொண்டுவரப்படவேண்டும்.

"மக்களின் வாழ்க்கைச் செலவு உயர்வைக் குறைப்பதற்காக அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்படவேண்டும்"

மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளை முன்வைத்தே 28ம் திகதி ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் நடைபெறுகிறது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.